# கோவை மெட்ரோ ரெயில் திட்டத்துக்கு திட்ட அறிக்கை தயாரிப்பு

தமிழக பட்ஜெட்டில் கூறப்பட்டிருப்பதாவது:-

★ மெட்ரோ ரெயில் திட்டத்தின் பலனைக் கருத்தில்கொண்டு, இத்திட்டத்தின் 2-ம் கட்டமாக, 107.55 கிலோமீட்டர் நீளமுள்ள 3 மெட்ரோ ரெயில் வழித்தடங்கள் அமைப்பதற்கான திட்டம் மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்டு, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதியுதவியை எதிர்நோக்கி மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் 2-ம் கட்டத் திட்டத்திற்கு, மத்திய அரசு விரைவில் தனது ஒப்புதலை வழங்கும் என நம்புகிறோம்.

இதன் தொடர்ச்சியாக, கோயம்புத்தூர் மாநகருக்கான மெட்ரோ ரெயில் திட்டத்தினைச் செயல்படுத்துவது தொடர்பான விரிவான சாத்தியக் கூறுகள் மற்றும் திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பணிகள் துவங்கப்பட்டுள்ளன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கு ரூ.750 கோடியை பங்கு மூலதன உதவியாகவும், ரூ.1,000 கோடியை துணைக் கடனாகவும் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் சுற்றுலா மேம்பாட்டிற்காக ரூ.173.42 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

